மங்கையர் மலர்

**March 1-15, 2016**

75 ஆண்டுகள் | கல்கி குழுமம்

சந்திப்பு : ஜி.மீனாட்சி
புகைப்படம் : மணிசுந்தரம்

# வேர்களைத் தேடி...


அகிலா ராம்நாராயண்

சங்கீத நாடக அகாடமி சார்பில் வழங்கப்படும் உஸ்தாத் பிஸ்மில்லாகான் யுவபுரஸ்கார் விருதை (2013-2014) சென்ற ஆண்டு பெற்றிருக்கிறார் சென்னையைச் சேர்ந்த தியேட்டர் ஆர்ட்டிஸ்ட் அகிலா ராம்நாராயண். ஆங்கில மேடை நாடகங்களில் மிகச் சிறப்பாக தனது நடிப்பை வெளிப்படுத்தி வருவதற்காக இவருக்கு இந்த விருது அளிக்கப்பட்டிருக்கிறது. கல்கி குடும்பத்தின் நான்காவது தலைமுறையைச் சேர்ந்தவர் அகிலா என்பதால் இயல்பிலேயே கலையார்வமும், நடிப்பும், இசையும் இவரது உணர்வில் கலந்துவிட்டிருக்கிறது என்று சொல்லவும் வேண்டுமோ?

ஆங்கில இலக்கியத்தில் முதுகலைப் பட்டமும், அமெரிக்காவின் ஓஹையோ ஸ்டேட் யுனிவர்சிட்டியில் தமிழ் மலர்ச்சி இலக்கியம் குறித்து (குறிப்பாக கல்கியின் சிவகாமியின் சபதம்) ஆராய்ச்சி செய்து முனைவர் பட்டமும் பெற்றவர் அகிலா. அமெரிக்காவின் டேடன் யுனிவர்சிட்டியில் ஆறு ஆண்டுகள் ஆங்கிலத் துறை உதவிப் பேராசிரியராகப் பணிபுரிந்துவிட்டு, கலை மீதான தீவிரமான தேடலால் இந்தியாவுக்கே திரும்பிவிட்டவர். ஒரு மாலைப் பொழுதில் அவரைச் சந்தித்தபோது...

உங்களது இளமைப் பருவம்...

*சென்னை சிஷ்யா பள்ளியில் பிளஸ் டூ படித்தேன். டபிள்யூ.சி.சி.யில் பி.ஏ., ஸ்டெல்லா மேரீஸில் எம்.ஏ. ஆங்கில இலக்கியம் படித்துவிட்டு, அமெரிக்கா சென்று ஆராய்ச்சி செய்து பிஎச்.டி. பட்டம் பெற்றேன். கலையார்வமும், இசையார்வமும் மிக்க குடும்பச் சூழ்நிலையால், சிறு வயதிலேயே பாட்டு, நடனம் கற்றுக்கொண்டேன். என் அம்மா கௌரி ராம்நாராயண்தான் என் முதல் குரு. என் பாட்டி ஆனந்தியிடமிருந்து (அமரர் கல்கியின் மகள்) புராண, இதிகாச கதைகள் பலவற்றையும் அறிந்துகொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது. இசை, நாடகம் என்று எந்த நிகழ்ச்சிக்குப் போனாலும் பாட்டி என்னையும் தன்னுடன் அழைத்துச் செல்வார். என் கொள்ளுப்பாட்டி ருக்மிணிதான் (கல்கியின் மனைவி) என்னுடைய முதல் பெஸ்ட் ஃபிரண்ட். கல்கி தாத்தாவைப் பற்றி பேச ஆரம்பித்தால், ருக்மிணி பாட்டிக்குப் பொழுதுபோவதே தெரியாது. கணவரின் பெருமைகளை, அவரது எழுத்தைச் சிலாகித்துப் பேசிக்கொண்டே இருப்பார்.*

*கல்கியின் படைப்புகளைப் படிக்க ஆரம்பித்தபோது, மிகவும் பிரமிப்பாக இருந்தது. எப்படி இவரால் இத்தனை விஷயங்களை எழுத முடிந்தது என்று ஆச்சரியமாக இருந்தது. சிறு வயதில் ஆனந்தி பாட்டியுடன் குற்றாலத்துக்குச் சென்று டி.கே.சி தாத்தா வீட்டில் தங்கி அவர்களது குடும்பத்தினருடன் செலவிட்ட பொழுதுகள் மிகவும் அற்புதமானவை. 'இதோ... இந்த இடத்தில்தான் கல்கி தாத்தா, சதாசிவம் தாத்தா, டி.கே.சி. தாத்தா எல்லோரும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்பார்கள். இந்த இடத்தில்தான் படித்துக் கொண்டிருப்பார்கள்' என்று பெரியவர்கள் சொல்லும்போதெல்லாம் என்னையறியாமலேயே எனக்குள் ஒரு சிலிர்ப்பு ஏற்படும். நான் அமெரிக்காவில் பேராசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்த காலத்தில், மீண்டும் தமிழகத்துக்குத் திரும்பவேண்டும் என்று எனக்குள் ஆர்வமேற்படுத்தியவை இந்த வேர்களே...*

**நடிப்பில் ஆர்வம் வந்தது எப்படி?**

என் அம்மா கௌரி ராம்நாராயண் 2005-ல் 'ஜஸ்ட் அஸ் ரெப்பர்ட்டரி' என்ற நாடகக் குழுவைத் தொடங்கி அருமையான பல நாடகங்களை அரங்கேற்றி வருகிறார். அம்மாவுடைய தயாரிப்புகள் பலவற்றில் நான் பின்னணி பாடியிருக்கிறேன். அம்மாவின் 'ஃப்ளேம் ஆஃப் தி ஃபாரஸ்ட்' நாடகத்தில் பாடும் வாய்ப்புக் கிடைத்தது. 'வாட்டர் லில்லீஸ்' என்ற நாடகத்திலும், 'டார்க் ஹார்ஸ்' என்ற நாடகத்தில் இலங்கைப் பெண்ணாகவும் நடித்தேன். இப்படி அமெரிக்காவில் வேலை பார்த்துக்கொண்டே சென்னை வந்து நாடகங்களில் நடிப்பது, ஒத்திகை பார்ப்பது என்றிருந்தேன்.

அமெரிக்க வாழ்க்கையும், மாணவர்களுடனான என் அனுபவமும் மிகவும் பிடித்திருந்தது. ஆனாலும் ஏதோ ஒரு இருப்புக்கொள்ளாமை... என் வேர்கள் இந்தியாவில் இருக்கும்போது நான் அமெரிக்காவில் இருந்து இயங்குவது சரிப்படாது என்று என் உள்ளுணர்வு சொல்லிக் கொண்டே இருந்தது. என்னுடைய சந்தோஷம்தான் என் பெற்றோருக்கு. என் அப்பா மிகவும் விசால மனம் படைத்தவர். 'உனக்கு எது திருப்தியளிக்கிறதோ அதைச் செய்' என்று சொல்வார். இப்படி அருமையான பெற்றோர் எனக்கு வாய்த்திருப்பதால், சுதந்திரமாக முடிவெடுக்க முடிந்தது. ஒரு கட்டத்தில் இந்தியா திரும்பிவிடுவதுதான் எனக்கு மகிழ்ச்சியளிக்கும் என்று புரிந்தது.

**உங்களைப் பொறுத்தவரை நடிப்பு என்பது...**

தியேட்டர் என்பது நடிப்பவர்களின் மீடியம்தான். ஆனாலும் நாடகத்தை இயக்கும் இயக்குநரின் பார்வையிலிருந்து அதைப் பார்க்க வேண்டும். அந்த பாத்திரத்துக்குள் கூடு விட்டுக் கூடு பாய வேண்டும். பாத்திரத்தை அவதானிக்க வேண்டும். ஒரு ராஜஸ்தானியப் பழங்குடிப் பெண்ணின் வேடத்தில் நான் நடித்தபோது, அந்தப் பெண் எப்படித் துணி மடிப்பாள் என்பதையெல்லாம்கூட உன்னிப்பாகக் கவனித்து செய்திருந்தேன். 'த டே இன் அசாடா' நாடகத்தில் காளிதாஸனின் காதலி மல்லிகாவாக நடித்தது மறக்க முடியாத அனுபவம். நாடகத்தில் நடிப்பவருக்கு புராணங்களும், இதிகாசங்களும், சரித்திரங்களும் தெரிந்திருக்க வேண்டும். நாடகம் என்பது வெறும் நடிப்பு மட்டுமல்ல. காட்சியமைப்பு, தொழில்நுட்பம் என்று பலவும் சம்பந்தப்பட்டது. இதையெல்லாம் புரிந்துகொண்டு, உள்வாங்கி நடிப்பது ஒரு சுகமான அனுபவம்.



'டான் குய்க்ஸோட்' நாடகத்தில் ஒரு காட்சி...

**யுவபுரஸ்கார் விருது பற்றி...**

இப்படியொரு விருது கிடைக்கும் என்று நான் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. ஏதோ என் போக்கில் நடித்துக்கொண்டிருந்தேன். விருது கிடைத்த விஷயத்தை நண்பர்கள் தொலைபேசியில் தெரிவித்தபோதுகூட என்னால் நம்ப முடியவில்லை. விருது என்பது ஒரு சின்ன இளைப்பாறல் மட்டுமே. அதற்கும் மேல் நிறைய இருக்கிறது. விருது பெறும் விழாவில் 'சாக்ஷி' என்ற ஒரு மணி நேர சோலோ நாடகத்தை அரங்கேற்றினேன். போர் குறித்து வெவ்வேறு தளங்களைச் சேர்ந்த மூன்று பெண்களின் பார்வையை எடுத்துக்காட்டும் வகையிலமைந்த நாடகம் அது.

**சமீபத்திய உங்களது நாடகப் பணி...**

ஸ்பெயின் நாட்டு எழுத்தாளர் மிகுவல் டெ செர்வான்டெஸ் எழுதிய, 17-ம் நூற்றாண்டைச் சேர்ந்த 'டான் குய்க்ஸோட்' என்ற நாவலை மையமாகக் கொண்டு இசை, நடனம், நாடக வடிவில் சஹ்ருதயா ஃபவுண்டேஷன் தயாரித்து அரங்கேற்றியது. 2015-ல் அமெரிக்காவில் மட்டும் 15 இடங்களில் ஒரு மாத காலம் அந்த நாடகத்தைத் திரையிட்டோம். அந்த நாடகத்திற்காக முதன் முதலாக திரைக்கதை வசனம் எழுதினேன்.

**குடும்பத்தினரின் ஒத்துழைப்பு எப்படியுள்ளது?**

என் அம்மா, அப்பா, தம்பி என்று எல்லோருமே பத்திரிகைத் துறையில், எழுத்து, கலை சார்ந்த துறையில் இருப்பதால் என் நாடகப் பணிக்கு மிகுந்த ஊக்கமும், ஒத்துழைப்பும் தருகிறார்கள். சுதந்திரமாகச் செயல்பட என்னை அனுமதிக்கிறார்கள். ஒரு கலைஞனுக்கு இதைவிட வேறு என்ன வேண்டும்? ●